சுருக்கம்

பள்ளிக் கல்வி – பிற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் இணைய வழியாக தமிழ் கற்பதற்கு ஏதுவாக தமிழ் இணையக் கல்வி கழகத்தால் மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாடு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் மேலாய்வு செய்யப்பட்ட, அகரம் (நிலை–1), இகரம் (நிலை–2), உகரம் (நிலை–3), ழகரம் (நிலை–4) மற்றும் சிகரம் (நிலை–5) ஆகிய பாடத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (கஆப) துறை

அரசாணை (ப) எண்.254 நாள் 27.12.2024.

திருவள்ளுவர் ஆண்டு 2055
குரோதி வருடம், மார்கழி 12
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.300, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20.12.2007
2. அரசாணை (நிலை) எண்.28, பள்ளிக் கல்வித் (கஆப) துறை, நாள் 06.02.2023.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 24092/பிடி1/ இ1/2023, நாள் 18.10.2024.

*****

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் சான்றிதழ் கல்விக்குரிய (1–ஆம் வகுப்பு முதல் 6–ஆம் வகுப்பு வரை) தமிழ் பாடத்திட்டம் மற்றும் இணையவழி பாடங்களுக்கு அங்கீகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் நடத்தப்படும் மேற்சான்றிதழ் கல்வி நிலை–1, நிலை–2 மற்றும் நிலை–3க்கான (7–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை) தமிழ் பாடத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், பிற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழ் கற்கும் திறமையையும் ஆர்வத்தையும் ஊக்குவிக்கும் வகையில் இணைய வழியாக தமிழ் கற்பதற்கு ஏதுவாக தமிழ் இணையக் கல்வி கழகத்தால் மாற்றியமைக்கப்பட்டு தமிழ்நாடு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் மேலாய்வு செய்யப்பட்ட அகரம் (நிலை–1), இகரம் (நிலை–2), உகரம்

(நிலை–3), ழகரம் (நிலை–4) மற்றும் சிகரம் (நிலை–5) ஆகிய பாடத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. மேற்தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்த அரசு அதனை ஏற்று, பிற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழ் கற்கும் திறமையையும் ஆர்வத்தையும் ஊக்குவிக்கும் வகையில் இணைய வழியாக தமிழ் கற்பதற்கு ஏதுவாக தமிழ் இணையக் கல்வி கழகத்தால் மாற்றியமைக்கப்பட்டு தமிழ்நாடு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் மேலாய்வு செய்யப்பட்ட அகரம் (நிலை–1), இகரம் (நிலை–2), உகரம் (நிலை–3), ழகரம் (நிலை–4) மற்றும் சிகரம் (நிலை–5) ஆகிய பாடத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சோ.மதுமதி**
**அரசு செயலாளர்**

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை–06.
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை–6.
தமிழ் இணையக் கல்விக் கழகம்,
அண்ணா பல்கலைக் கழக வளாகம்,
கோட்டூர்புரம், சென்னை–600 025.

நகல்
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–09.
பள்ளிக் கல்வித் துறை செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச் செயலாளர், சென்னை–09.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

27/12/2024
பிரிவு அலுவலர்
27/12/24